நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பருத்தி சாகுபடியில் அதிக லாபம் பெறலாம்**

First Published : 16 Apr 2011 10:09:49 AM IST

திண்டுக்கல், ஏப். 15:÷பருத்திக்கு உலக அளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், அதன் விலை இரு மடங்கு உயர்ந்துள்ளது. விவசாயிகள் தற்போது பருத்திப் பயிரினைச் சாகுபடி செய்தால் அதிக லாபம் பெற வாய்ப்புள்ளது என்று திண்டுக்கல் வேளாண் துணை இயக்குநர் (வணிகம்) கு.ரா. சாரநாத்பாபு அறிவுறுத்தியுள்ளார்.

÷இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:÷இந்தியாவில் அதிகளவில் பருத்தி உற்பத்திச் செய்யும் மகாராஷ்டிரம், ஆந்திரம், குஜராத் ஆகிய மாநிலங்களில் வெள்ளம் மற்றும் பருவம் தவறிய மழை காரணமாகப் பருத்தி உற்பத்தி குறைந்துள்ளது. மேலும், சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் பருத்தி விலையை விட இந்தியாவில் உற்பத்தியாகும் பருத்தியின் விலை குறைவு என்பதால் ஏற்றுமதிக்கான தேவையும் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் நடப்பு ஆண்டில் 1.3 லட்சம் ஹெக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது.

÷கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் பருத்தி சந்தை நிலவரங்களை ஆய்வு செய்து மாசிப் பட்டப் பருத்திக்கான விலையை முன் அறிவிப்பு செய்துள்ளது. இதன்படி பிப்ரவரி, மார்ச் மாதங்களில் சாகுபடி செய்யப்பட்டு, வரும் செப்டம்பரில் அறுவடையாகும் நீண்ட இழை பருத்தி, குவிண்டாலுக்கு ரூ. 5,500 முதல் ரூ. 6,200 வரை விலை கிடைக்கும்.

÷எனவே, நடப்பாண்டில் விவசாயிகள் பருத்தி சாகுபடியில் ஈடுபட்டால் அதிக லாபம் பெறலாம் எனத் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**நாட்டின் பணவீக்கம் 8.98 சதவீதமாக உயர்வு**

ஏப்ரல் 16,2011,00:59



புதுடில்லி: மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில், கணக்கிடப்படும் நாட்டின் ஒட்டுமொத்த பணவீக்கம், சென்ற மார்ச் மாதத்தில், 8.98 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது, சென்ற பிப்ரவரி மாதத்தில், 8.31 சதவீதமாக இருந்தது.நாட்டின் பொது பணவீக்கம், சென்ற ஜனவரி மாதத்தில், 8.23 தசவீதம் என முன்பு மதிப்பிடப்பட்டிருந்து. இது, மறுமதிப்பீட்டில், 9.50 சதவீதமாக அதிகரித்துள்ளது.

சென்ற மார்ச் மாதத்தில், உற்பத்தி பொருள்கள் பணவீக்கம், 6.21 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது, பிப்ரவரி மாதத்தில் 4.94 சதவீதமாக இருந்தது. மூலப்பொருள்கள் விலை உயர்வு மற்றும் உற்பத்தி செலவினங்கள் அதிகரித்து வருவது போன்ற காரணங்களால், பணவீக்கம் உயர்ந்துள்ளது.

மார்ச் மாதத்தில், எரிபொருள்களுக்கான பணவீக்கம், 11.49 சதவீதத்திலிருந்து 12.92 சதவீதமாக அதிகரித்துள்ளது.

ரிசர்வ் வங்கி, மார்ச் மாதத்தில் பணவீக்கம் 7 சதவீதமாக இருக்கும் என முன்பு கணித்து பிறகு 8 சதவீதமாக உயர்த்தி நிர்ணயித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் ஒட்டுமொத்த பணவீக்கம், வாரத்தின் அடிப்படையில் சென்ற மார்ச் 5ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 9.45 சதவீதமாக இருந்தது.

12 தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் இது, 10.05 சதவீதம் என்ற இரட்டை இலக்கத்தை எட்டியது. இப்பணவீக்கம், 19ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் இது, 9.50 சதவீதமாகவும், 26ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 9.18 சதவீதமாகவும் இருந்தது.உணவுப் பொருள்கள் விலை உயர்வு தான், நாட்டின் பொது பணவீக்க அதிகரிப்பிற்கு காரணம் என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. நாட்டின் பணவீக்கத்தை கட்டுப்படுத்த, ரிசர்வ் வங்கி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் விளைவாக, சென்ற 2010ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து, இதுவரையில், வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை எட்டு முறை உயர்த்தியுள்ளது.இந்நிலையில்,சென்ற திங்கள் கிழமையன்று நாட்டின் தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி முடிவுகள் வெளியிடப்பட்டன. சென்ற பிப்ரவரியில், நாட்டின் தொழிற்துறை உற்பத்தி வளர்ச்சி 3.6 சதவீதமாக குறைந்திருந்தது. இது, ஜனவரியில் 3.9 சதவீதமாக இருந்தது. சுரங்கம், மின்சாரம் மற்றும் நுகர்வோர் சாதனங்களின் பணவீக்கம் முறையே, 0.6 சதவீதம், 6.7 சதவீதம் மற்றும் 11.1 சதவீதம் என குறைந்திருந்தது.சென்ற மார்ச் மாதத்தில், ரிசர்வ் வங்கி வெளியிட்ட காலாண்டு ஆய்வறிக்கையில், வங்கிகளுக்கு வழங்கும் கடன்களுக்கான, 'ரெப்போ' வட்டி விகித்தை 0.25 சதவீதம் உயர்த்தி, 6.7 சதவீதமாக அதிகரித்தது.

இதேபோல், வங்கிகளிடமிருந்து, ரிசர்வ் வங்கி பெறும், கடன்களுக்கான 'ரிவர்ஸ் ரெப்போ' கடன்களுக்கான வட்டி விகிதத்தையும் 0.25 சதவீதம் அதிகரித்து 5.75 சதவீதமாக உயர்த் தியது.

உணவுப்பொருள் பணவீக்கம் 8.28 சதவீதமாக குறைந்தது

ஏப்ரல் 2ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம் 8.28 சதவீதமாக குறைந்துள்ளது.

இது, முந்தைய வாரத்தில், 9.18 சதவீதமாக இருந்தது. இது, சென்ற ஆண்டு நவம்பர் 20ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவுப் பொருள்கள் பணவீக்கம் 8.60 சதவீதமாக மிகவும் குறைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், பருப்பு வகைகளின் விலை, 4.76 சதவீதமாகவும், உருளைக் கிழங்கு மற்றும் கோதுமை ஆகியவை முறையே, 2.73 சதவீதம் மற்றும் 1.05 சதவீதமாகவும் குறைந்திருந்தது.மதிப்பீட்டு காலத்தில், பழங்களின் விலை 24.14 சதவீதமாக உயர்ந்திருந்தது. முட்டை, இறைச்சி, மீன் போன்றவற்றின் விலை 11.02 சதவீதம் அதிகரித்திருந்தது. மேலும், பாலின் விலை 4.05 சதவீதம் உயர்ந்து காணப்பட்டது. இவை தவிர, தானியங்கள் விலை 3.49 சதவீதம் அதிகரித்து இருந்தது. நெல் மற்றும் கோதுமை ஆகியவற்றின் விலை, 2.2 சதவீதம் உயர்ந்திருந்தது. இவை தவிர, காய்கறிகள் (5.41 சதவீதம்), வெங்காயம் (7.74 சதவீதம்) ஆகியவற்றின் விலையும் உயர்ந்திருந்தது.

உணவுச் சாராத பொருள்களின் விலையும் 26.77 சதவீதம் உயர்ந்திருந்தது. இப்பிரிவின் கீழ், நூலிழை (86.74சதவீதம்), எரிபொருள் மற்றும் மின்சாரம் (12.97சதவீதம்) போன்றவற்றின் விலையும் உயர்ந்திருந்தது.

**பருத்தி உற்பத்தி 3.5 கோடி பொதிகளாக உயரும்**

ஏப்ரல் 16,2011,00:54



புதுடில்லி: வரும் 2011-12ம் (ஆகஸ்ட்-ஜூலை) பருத்தி பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி 3.5 கோடி பொதிகளாக அதிகரிக்கும் என, அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது.பருத்தி உற்பத்தி சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டு வருவதால், இதன் விலையும் அதிகரித்து வருகிறது. இது, இத்துறையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளித்துள்ளதால், பருத்தி உற்பத்தி செய்யும் பரப்பளவை அதிகரிக்க அவர்கள் முடிவு செய்துள்ளனர். நடப்பு 2010-11ம் ஆண்டு பருத்தி பருவத்தில் (ஆகஸ்ட் - ஜூலை), 3.2 கோடி பருத்தி பொதிகள் (ஒரு பொதி என்பது 170 கிலோ) உற்பத்தி செய்யப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பருத்தி உற்பத்தி செய்யும், பரப்பளவும் 12 சதவீதம் அதிகரித்து, 1.3 கோடி எக்டேராக அதிகரிக்கும் என்றும் இதில், பி.டி. வகை பருத்தி பயிரிடும் பரப்பு 90 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகாரபூர்வமற்ற வகையில், பி.டி. விதை பயிரிடப்படுவதும் அதிகரிக்கும் என, மேலும் அத்துறை தெரிவித்துள்ளது.

**தென்னை கருத்தலைப்புழு கட்டுப்படுத்தும் முறை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2011,01:23 IST

நாமக்கல்: "தமிழ்நாட்டில் பருவ மழைக்கு பிறகு வெயில் காலங்களில் கருத்தலைப்புழு தென்னையை அதிகமாக தாக்குகிறது. பூச்சிகள் அதிகமாக தாக்கப்பட்ட மட்டைகளை வெட்டி எடுத்துவிட வேண்டும்' என, வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:தமிழ்நாட்டில் பருவ மழைக்கு பிறகு வெயில் காலங்களில் கருத்தலைப்புழு தென்னையை அதிகமாக தாக்குகிறது. தாய்ப்பூச்சிகள், மட்டைகளின் இடுக்குகளில் முட்டையிடும் புழுக்களின் தலைப்பாகம் கறுப்பாக இருக்கும்.

அவை தென்னை ஓலைகளில் கழிவுப் பொருட்களையும், பசை நூலையும் கொண்டு செய்யப்பட்ட மெல்லிய நூலாம்படையினுள் இருக்கும். முதலில் தாக்கப்பட்ட மரங்களில், சில ஓலைகளில் மட்டும் சேதம் தென்படும். பிறகு, புழுக்கள் ஆயிரக்கணக்கில் பெருகி சில நாட்களில் ஒவ்வொரு ஓலையும் தின்று ஓலைகள் பச்சையின்றி மரங்கள் தீய்ந்து போனது போல் காட்சியளிக்கும்.

அவற்றை கட்டுப்படுத்த, பூச்சிகள் அதிகமாக தாக்கப்பட்ட மட்டைகளை வெட்டி எடுத்துவிட வேண்டும்.அதிகமான தாக்குதல் தென்படும் தோப்புகளில், ஒட்டுண்ணிகளை போதுமான எண்ணிக்கையில் விட்டு தாக்குதலை கட்டுப்படுத்துவது அவசியமாகும். பெத்திலிட் பிரக்கானிடு ஒட்டுண்ணிகள், கருத்தலைப் புழுக்களின் உடம்பில் ஏராளமாக முட்டையிட்டு அதிலிருந்து வரும் ஒட்டுண்ணிப் புழுக்கள், கருத்தலைப் புழுக்களை தின்று அழிக்கின்றன.

ஒரு மடங்கு கருத்தலைப் புழுவிற்கு எட்டு மடங்கு ஒட்டுண்ணிகளை விட வேண்டும். ஒட்டுண்ணிகளை தென்னை மரத்தின் அடிப்பாகத்தில் தான் விட வேண்டும். ஒட்டுண்ணிகளை வாங்குவதற்கு, அருகில் உள்ள வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம். தாக்கப்பட்ட மட்டைகளில், மாலத்தியான், 500 மில்லி மருந்தை, 250 லிட்டர் நீரில் கலந்து, ஒரு கிலோவை, 250 லிட்டர் நீரில் கரைத்தும் தென்னை ஓலையின் அடிப்பாகம் நனையும்படி தெளித்து புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

அதிகமாக தாக்கப்பட்ட மரத்தடியில் இருந்து மூன்றடி உயரத்தில், 45 கோணத்தில் துளைபோட்டு மானோகுரோட்டபாஸ், 5 மில்லியுடன், 20 மில்லி தண்ணீரில் கலந்து இட வேண்டும். பின்பு, துவாரத்தை களி மண்ணுடன் பைட்டலான் சேர்த்து அடைக்க வேண்டும். அதனால், பூச்சி மருந்து மேல்நோக்கி சென்று ஓலைகளை உண்ணும் புழுக்களை அழிக்கிறது. மருந்து இடுவதற்கு முன்,

மரத்திலிருக்கும் முதிர்ந்த காய்களை பறித்துவிட வேண்டும். மருந்திட்ட பிறகு, 45 நாளுக்கு காய்களை பறிக்கக் கூடாது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உற்பத்தி மிகுதியால் கறிக்கோழி விலை சரிவு கிலோ ரூ.56க்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2011,01:38 IST

நாமக்கல்: கடந்த ஒரு மாதத்துக்கு முன் "கிடுகிடு'வென ஏற்றம் கண்டு வந்த கறிக்கோழியின் விலை, உற்பத்தி மிகுதி உள்ளிட்ட காரணங்களால் சரிந்துள்ளது. தற்போது ஒரு கிலோ கறிக்கோழி விலை, 56 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்படுகிறது. கறிக்கோழி விலை சரிந்தபோதிலும், சில்லறை விற்பனை கடையில் அதன் விலை குறைக்காதது, அசைவப் பிரியர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில், கோவை, பல்லடம், திருப்பூர் ஆகிய இடங்களில் கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. அங்கு உற்பத்தி செய்யப்படும் கறிக்கோழி, தமிழகம் முழுவதும் மற்றும் கேரளா, கர்நாடகா போன்ற வெளி மாநிலங்களுக்கு நாள்தோறும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

கேரள மாநிலத்துக்கு மட்டும் ஒரு வாரத்துக்கு சராசரியாக, 3 லட்சம் கறிக்கோழிகள் விற்பனைக்கு செல்கிறது. கறிக்கோழியின் தேவையை பொறுத்து, பல்லடத்தில் செயல்படும் கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு, விலையை நிர்ணயம் செய்கிறது. அந்த விலைக்கு கறிக்கோழி வெளிமார்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது. அதன்படி, சென்ற மார்ச் மாதம் 7ம் தேதி, ஒரு கிலோ கறிக்கோழி, 69 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டது. கறிக்கோழி வரலாற்றில் இதுவே அதிகபட்ச விலையாக கருதப்பட்டது. அந்த விலையை முறியடிக்கும் வகையில், மார்ச் 23ம் தேதி ஒரே நாளில் கறிக்கோழியின் விலை, 6 ரூபாய் ஏற்றம் கண்டு, 75 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. அந்த விலை தொடர்ந்து நீடித்து வந்த நிலையில், மார்ச் 31ம் தேதி, 4 ரூபாய் சரிந்து, 71 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

பின், கறிக்கோழியின் விலை படிப்படியாக சரியத் துவங்கியது. நேற்றைய நிலவரப்படி, ஒரு கிலோ கறிக்கோழி, 56 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. "உற்பத்தி மிகுதி மற்றும் தேவை குறைவு காரணமாக கறிக்கோழி விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது' என, கறிக்கோழி விற்பனையாளர்கள் தெரிவித்தனர். கறிக்கோழி விலை குறைந்தபோதும், சில்லரை விற்பனை கடைகளில் அதன் விலை குறைந்தபாடில்லை. ஒரு கிலோ கறிக்கோழி, 110 ரூபாய் முதல் 120 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. சில்லிசிக்கன் கடைகளிலும், 100 கிராம் சில்லி சிக்கன், 20 ரூபாயிருந்து 25 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கறிக்கோழியின் விலை உயரும்போது

விலையை உயர்த்தும் சில்லிசிக்கன் விற்பனையாளர்கள், அதன் விலை குறையும்போது, விலையை குறைக்காதது, அசைவ பிரியர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

**நுங்கு விற்பனை: மக்கள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2011,01:22 IST

நாமக்கல்: கோடை வெயிலுக்கு இதமளிக்கும் வகையில், பனை "நுங்கு' விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளது. அவற்றை மக்கள் போட்டி போட்டு வாங்கிச் செல்கின்றனர். நாமக்கல் நகரப் பகுதியில், கடந்த சில வாரங்களாக கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. வெயிலின் தாக்கத்தால், பகல் பொழுதில் சாலைகளில் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்படுகிறது. வெயிலின் தாக்கம் காரணமாக, அதிலிருந்து தற்காத்துக் கொள்ளும் வகையில் தர்ப்பூசணி, வெள்ளரி, பழசரம் பக்கம் மக்கள் நாடத் துவங்கியுள்ளனர். தற்போது, கோடை வெயிலுக்கு இதமளிக்கும் வகையில் நுங்கு விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளது. நுங்கு சீஸன் துவக்கம் முதலே, அதன் வரத்து மிகுந்திருப்பதால் விற்பனை களைகட்டத் துவங்கியுள்ளது. பத்து ரூபாய்க்கு, 5 முதல் 7 நுங்கு வரை தரப்படுகிறது.
விலை சற்று அதிகம் என்றபோதிலும், அவற்றை பொருட்படுத்தாமல் மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். இந்தாண்டு நுங்கு விளைச்சல் நன்கு இருப்பதால், வரும் வாரங்களில், அதன் விலை மேலும் குறையும் என, நுங்கு விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**கி.கிரி மாவட்டத்தில் கால்நடை தீவன தட்டுப்பாடு:விவசாயிகள் பெரும் கலக்கம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2011,00:10 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வீசி வரும் கடும் வெப்பத்தால் பல இடங்களில் வறட்சி தாண்டவமாடுகிறது. இதனால் கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் விரக்த்தியடைந்துள்ளனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாக உள்ளது. வேளாண்மை துறை மூலம் நவீன இயந்திரங்களை கொண்டு பண்ணை எந்திரமயமாக்கல் திட்டம் மாவட்டத்தில் செயல்படுத்தினாலும் பல கிராமங்களில் விவசாய தேவைக்கு முழுவதுமாக காளை மாடுகள் பயன்படுத்தப்படுகிறது.

வண்டி இழுத்தல் உள்ளிட்ட பல வேலைகளுக்கு 50,000க்கும் மேற்பட்ட மாடுகள் பயன்படுத்தப்படுகிறது. இது போக மாவட்டத்தில் கறவை மாடுகள் மட்டும் சுமார் 2 லட்சம் உள்ளது. காட்டு மாடுகளாக 50,000 மாடுகள் வளர்க்கப்படுகிறது. இதனையும் சேர்த்து மாவட்டத்தில் மொத்தம் 3 லட்சத்துக்கு மேற்பட்ட மாடுகளும், 2 லட்சம் ஆடுகளும் வளர்க்கப்படுகிறது. பொதுவாக கறவை மாடுகளுக்கு பால் கொடுக்கும் சத்து அளிப்பதற்காக பூசா போன்ற திட உணவுகள் குறைந்த அளவு வழங்கப்படுகிறது.

மாடுகளின் வயிறு முழுமையாக நிரம்ப வேண்டுமானால் அதற்கு வைக்கோல் புல் முக்கிய உணவாக இருக்கிறது. மாவட்டத்தில் வைக்கோல் புல் பெரும்பாலும் தென்பெண்ணை ஆற்று படுகை பகுதியில் மட்டுமே கிடைத்து வருகிறது. மற்ற பகுதிகளில் கால்நடை வளர்ப்போர் மேய்சல் நிலங்களில் வளரும் புற்களையே நம்பி உள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்ட சராசரி மழை அளவு 830.5 மி.மி., ஆகும். கடந்த ஆண்டு 850 மி.மீ., மழை பெய்தது. இது சராசரி மழை அளவை விட அதிகமானதாகும். இருப்பினும் கடந்த ஆண்டு இயல்புக்கு மாறாக முதல் போக சாகுபடியின் போதே அதிக அளவு மழை பெய்துவிட்டது.

இதனால் அதிக மழை பெய்தும் விவசாயிகளுக்கு பயன்படாமல் போனது. இந்தாண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் குறிப்பிடத்தக்க மழை பெய்யவில்லை. இந்த மாதங்களில் மழை பெய்தால்தான் நிலங்களில் ஈரப்பதம் அதிகரித்து புற்கள் துளிர் விடும். அப்போது கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்படாது. இந்தாண்டு கடந்த மூன்று மாதங்களாக மழை பெய்யாத காரணதால் மேட்டுப்பாங்கான மேய்சல் நிலைங்களில் புற்கள் துளிர்விடவில்லை. இதனால் கால்நடைகளுககு கடும் தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில், குறிப்பாக ஊத்தங்கரை, மத்தூர், பர்கூர், கெலமங்கலம், தளி ஆகிய சுற்றுவட்டார பகுதிகளில் போதிய மழையின்மையால் நிலங்கள் காய்ந்துள்ளது.

இங்கு கால்நடைகளை வளர்போர் புல் தீவனங்கள் இல்லாததால் பனங்குருத்து மற்றும் நுங்கு காய்களை சீவி கால்நடைகளுக்கு உணவாக அளித்து வருகின்றனர். இனி வரும் நாட்களில் மாவட்டத்தில் மழை பெய்யாவிட்டால் கால்நடைகளை அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்யும் நிலை ஏற்படும். இது குறித்து மஜீத் கொல்லஅள்ளியை சேர்ந்த விவசாயி மாரப்பன் கூறியது: கிணற்று பாசனம் மூலம் நாங்கள் விவசாயம் செய்து வருகிறோம். விவசாயத்தின் அனைத்து தேவைகளுக்கும் நாங்கள் மாடுகளை பயன்படுத்தி வருகிறோம். மேலும் மகளிர் மன்றங்களில் இருந்து கடன் வாங்கி கறவை மாடுகளை வளர்த்து வருகிறோம்.

பால் ஊற்றுவதில் இருந்து கிடைக்கும் வருவாய் மாடுகளுக்கு பூசா மற்றும் புன்னாக்கு ஆகியவை வாங்குவதற்கே செலவழிக்கிறோம். தற்போது கால்நடை தீவனங்களின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த சில வாரங்களாக வீசி வரும் கடும் வெப்பக்காற்றால் மேய்சல் நிலங்கள் முழுவதும் வெறும் கட்டாந்தரையாக உள்ளதால் கால்நடைகளை மேய்சலுக்கு ஓட்டி செல்ல

முடியவில்லை. அதனால் கிடைக்கும் இலை மற்றும் பனங்குருத்துகளை வெட்டி கால்நடைகளுககு உணவாக கொடுக்கிறோம். எங்கள் பகுதியில் தீவன பற்றாக்குறை காரணமாக பலர் கால்நடைகளை குறைந்த விலைக்கு விற்றுவிட்டார்கள்.

இந்த நிலை தொடர்ந்தால் இருக்கும் கால்நடைகள் அனைத்தும் அடிமாட்டு விலைக்கு விற்று விடுவதை தவிர விவசாயிகளுக்கு வேறு வழியில்லை. தீவன பற்றாக்குறையை போக்க கால்நடை துறையினர் விவசாயிகளுக்கு துல்லிய பண்ணை திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் அமைத்து தீவன பயிற்களை வளர்க்க பயிற்சிகள் வழங்க வேண்டும். இதற்கான செலவினங்களுக்கு மானியம் வழங்க வேண்டும். கால்நடை தீவனங்களின் விலையை கட்டுப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**கி.கிரியில் திடீர் மழை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2011,00:12 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில் நேற்று மாலை திடீர் சாரல் மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கடும் வெப்பக்காற்று வீசி வருகிறது. இதனால் மா மரங்களில் இருந்து அதிக அளவு பிஞ்சுகள் வெதும்பி கீழே விழுந்தது. பல இடங்களில் டிராக்டரில் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு மா மரங்களுக்கு விடப்பட்டது. கடும் வெப்பக்காற்றாலும் அடிக்கடி ஏற்படும் மின் தடையாலும் பொதுமக்கள் அவதிக்குள்ளாகி வந்தனர். நேற்று காலை முதல் அளவுக்கதிகமான வெப்பக்காற்று வீசியது. இதனால் சாலைகளில் பொதுமக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. நேற்று மாலை 3.30 மணி அளவில் மேகம் கருத்து திடீர் சாரல் மழை பெய்தது. சுமார் 15 நிமிடம் பெய்த மழையால் பூமி குளிர்ந்தது. மேகமூட்டம் தொடர்ந்து இருப்பதால் மேலும் மழை வரும் என்பதால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மஞ்சள் ஒரே நாளில் ரூ. 2,034 வீழ்ச்சி 1,100 மூட்டை விற்காமல் தேக்கம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2011,01:17 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் நேற்று ஒரே நாளில் விரலி 1,885 ரூபாய், கிழங்கு 2,034 ரூபாய் வரை அதிரடி வீழ்ச்சியடைந்துள்ளது. ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு தேர்தலை முன்னிட்டு, ஏப்ரல் 11 முதல் 14ம் தேதி வரை விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது. தேர்தல் முடிந்து மார்க்கெட் நேற்று இயங்கியது. வழக்கத்தை விட மஞ்சள் மூட்டை வரத்து அதிகமாக இருந்தது. தேர்தலுக்கு முந்தைய வாரமான கடந்த 8ம் தேதி ஈரோடு ஒழுங்கு முறை விற்பனை கூடத்துக்கு

1,437 மூட்டைகள் வரத்தானதில் 1,378 மூட்டைகள் விற்றன. அன்றைய நிலவரப்படி விரலி குவிண்டாலுக்கு 10 ஆயிரத்து 366 முதல் 11 ஆயிரத்து 146 ரூபாய் வரையும், கிழங்கு 10 ஆயிரத்து 139 முதல் 10 ஆயிரத்து 700 ரூபாய் வரை விலைபோனது. நேற்று காலை 1,705 மூட்டைகள் வரத்தானது. ஏலம் துவங்கியதில் இருந்தே மஞ்சள் விலை இறங்குமுகமாகவே இருந்தது. இறுதியாக விரலி மஞ்சள் 8,715 முதல் 9,261 ரூபாயும், கிழங்கு மஞ்சள் 8,366 முதல் 8,666 ரூபாய் வரை மட்டுமே விலை போனது. கடந்த வாரத்தை ஒப்பிடுகையில் விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு 1,885 ரூபாயும், கிழக்கு மஞ்சள் 2,034 ரூபாயும் விலை குறைந்தது. விலை குறைவு காரணமாக "சேம்பல்' வைத்திருந்த விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்ய மனமின்றி திருப்பி எடுத்துச் சென்றனர். 1,110 மூட்டைகள் "கேன்சல்' ஆனது.

**பூ பூக்கும் காபி செடிகள் எதிர்பார்ப்பில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2011,02:28 IST

மஞ்சூர் : மஞ்சூர் தேயிலை தோட்டங்களில் ஊடுபயிராக பயிர் செய்யப்பட்டுள்ள காபி செடிகளில் அதிகளவில் பூ பூத்துள்ளது. நீலகிரி மாவட்டம் மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளான பாக்கோரை, மட்டக்கண்டி, தூனேரி, ஓணிக்கண்டி, மந்து, கண்டிஒலா, பென்ஸ்டாக் உட்பட்ட பகுதிகளில் தேயிலை தோட்டம் இடையே அதிகளவில் காபி பயிரிடப்பட்டுள்ளது. தற்போது தகுந்த சீதோஷ்ண நிலை நிலவுவதால் காபி செடிகளில் அதிகளவில் பூ பூத்துள்ளது. ஒரு சில நாட்களில் காய்ப்பு துவங்கிவிடும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். தற்போது ஒரு கிலோ காபிக்கு 170 முதல் 180 ரூபாய் வரை விலை கிடைத்து வருகிறது. கடந்த ஆண்டை விட கிலோவுக்கு கூடுதலாக 60 ரூபாய் வரை விலை கிடைத்து வருவதால் காபி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தமிழக கேரள எல்லையையொட்டியுள்ள கிண்ணக்கொரை, இரியசீகை உள்ளிட்ட பகுதிகளில் காபி பயிருக்கான ஏற்ற சீதோஷ்ண நிலை இருப்பதால் பல ஏக்கரில் காபி பயிரிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**ரோஜா பூங்காவில் வண்ண மலர்கள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2011,02:27 IST

ஊட்டி : ஊட்டி ரோஜா பூங்காவில் மலர்ந்துள்ள அழகிய ரோஜா மலர்களை காண சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர். ஊட்டி விஜயநகரம் பகுதியில் 1996ம் ஆண்டு ரோஜா பூங்கா உருவாக்கப்பட்டது. தோட்டக் கலை துறைக்கு சொந்தமான இடத்தில் 6 தளங்களில் உருவாக்கப்பட்ட இப்பூங்காவில், 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட செடிகளில் ரோஜாக்கள் மலர்ந்து

வருகின்றன. "கார்டன் ஆப் தி எக்ஸ்சலன்ஸ்' விருது பெற்ற இப்பூங்காவில், இந்த ஆண்டு பாரம்பரிய பூங்கா கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளது. சில தினங்களுக்கு முன் ஊட்டியில் கோடைமழை பெய்ததால், பூங்காவின் முதல் தளத்தில் ரோஜா மலர்கள் மலரத் துவங்கி விட்டன. வரும் நாட்களில், பூங்காவில் உள்ள அனைத்து தளங்களிலும் ரோஜாக்கள் மலர துவங்கி விடும் என்பதால், இதை பராமரிப்பதில் ரோஜா பூங்கா நிர்வாகம் துரிதமாக செயல்பட்டு வருகிறது. ரோஜா பூங்காவில் மலர்ந்துள்ள ரோஜாக்களை கண்டு ரசிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர்.

**திருச்சியில் மாம்பழம் சீஸன் துவக்கம் வரத்து குறைவு; விலை ஏற்றமில்லை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2011,00:15 IST

திருச்சி: மாம்பழம் சீஸன் துவங்கினாலும், வரத்து குறைவால் திருச்சியிலுள்ள கடைகளில் குறைவான மாம்பழங்களே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் மாம்பழம், "சீஸன்' துவங்கியுள்ளது. சேலம் பெங்களூரா, ருமானி, பங்கனப்பள்ளி, அல்போன்ஸா, தேசஹாரி, தோடபூரி, மல்கோவா, பஞ்சவர்ணம், களப்பாடு, நீலம் ஆகிய மாம்பழங்கள் தமிழகத்தில் விளைகின்றன. மா மரங்களில் பூ வைக்கும் நேரத்தில் நல்ல மழை பெய்தால் மட்டுமே அதிகளவு விளைச்சல் கொடுக்கும். மேலும், மா வடுக்கள் நன்கு வளர்ச்சி பெற்று, அதிக மகசூல் தரும்.

கடந்தாண்டு பருவ மழையில் மாற்றம், பூ வைக்கும் நேரத்தில் மழையின்மை போன்ற காரணங்களால் நடப்பாண்டு மா விளைச்சல் குறைந்துள்ளது. இதனால், நடப்பாண்டு மாம்பழம் வரத்து குறைவாகவே இருக்கும் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். திருச்சியில் செந்தூரம், பங்கனப்பள்ளி, இமாம்பசந்த், மல்கோவா போன்ற மாம்பழங்களே விற்பனைக்கு வந்துள்ளன. மா அறுவடை தற்போது தான் துவங்கியுள்ளதால், ஏப்ரல் இறுதியில் (சித்திரை 15 தேதிக்கு மேல்) தான் மாம்பழம் வரத்து அதிகரிக்கும். வரத்து குறைவாக உள்ளதால் விலையில் பெரிய மாற்றமில்லை. முதலில் வரும் மாம்பழங்கள் ருசி குறைவாக இருக்கும் என்பதால், விலையிலும் பெரிய ஏற்றம் இல்லை.

மாம்பழம் விலை ஒரு கிலோவில் செந்தூரம் 30, பங்கனப்பள்ளி 70, இமாம்பசந்த் 100, மல்கோவா 70 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஸ்ரீரங்கம், மாம்பழச்சாலையில் கடை வைத்து மாம்பழ வியாபாரம் செய்து வரும் சங்கர் கூறுகையில், ""தற்போது உள்ளூர் மாம்பழங்கள் மட்டுமே திருச்சியில் கிடைக்கிறது. வெளி மார்க்கெட்டிலிருந்து மாம்பழங்கள் வரவில்லை. வரத்து குறைவாகத் தான் உள்ளது. சித்திரை 15 தேதிக்கு மேல் மாம்பழம் வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம். மா மரத்தில் பூ வைக்கும் போது, மழை பெய்தால் தான் உற்பத்தி அதிகரிக்கும். ஆனால், போதிய

மழையில்லாததால், மா உற்பத்தி குறைந்துள்ளது. விளைச்சல் இல்லாததால் விலை அதிகரிக்கும்," என்றார்.

**மண் வளம் அறிய பரிசோதனை தோட்டக்கலைத்துறை அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2011,00:37 IST

லாலாப்பேட்டை: "மண் வளம் அறிய மண் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்' என, தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் அறிவித்துள்ளார். அறிக்கையில் உள்ளதாவது: வயலில் பயிர் செய்யாமல் தரிசாக இருக்கும்போது மண் மாதிரி எடுக்க வேண்டும். வீட்டு காய்கறி தோட்டத்துக்கு ஒரு மண் மாதிரி போதுமானது. வரப்பு ஓரம், எரு குவித்த இடங்கள், வாய்க்கால் ஓரம், மர நிழல் உள்ள இடங்களில் மண் மாதிரி எடுக்க கூடாது. மண் மாதிரி எடுக்கும் இடத்தில் இலை, சருகுகளை மட்டும் நீக்க வேண்டும்.

மேல் மண்ணை தவிர்த்துவிடாமல் மண் மாதிரி எடுக்க "வி' போன்ற வடிவம் வருமாறு வெட்டி குழியின் ஓரமாக மேலிருந்து கீழாக ஒரே சீராக 2 செ.மீ., கனத்துக்கு மண்ணை சுரண்டி எடுத்து சேகரிக்கவும். இதேபோல் பத்து இடங்களில் மண் சேகரித்து பிளாஸ்டிக் காகிதத்தில் கொட்டி கலந்து மண்ணில் இருக்கும் கல், வேர், தண்டுகள் முதலியவற்றை அப்புறப்படுத்தி நிழலில் உலர்த்த வேண்டும். உலர்ந்த மண்ணை நன்றாக கலந்து அரை கிலோ இருக்கும்படி துணிப்பையில் கட்டிவைக்க வேண்டும். நெல், கேழ்வரகு, கடலை போன்ற சல்லி வேர் பயிர்களுக்கு மண் மாதிரி 15 செ.மீ., ஆழத்தில் எடுக்க வேண்டும்.

பருத்தி, கரும்பு போன்ற ஆணிவேர் பயிர்களுக்கு மண் மாதிரி 22 செ.மீ., ஆழத்தில் எடுக்க வேண்டும். தென்னை மற்றும் பழந்தோட்ட மரங்களுக்கு மண் மாதிரிகள் 30, 60, 90 செ.மீ., ஆழத்தில் மூன்று மண் மாதிரி எடுக்க வேண்டும். மண் மாதிரி அனுப்பும் போது விவசாயி பெயர், விலாசம், நிலத்தின் சர்வே எண், பாசன வசதி, பயிரிட்ட முன் பயிர், பயிரிட உள்ள அடுத்த பயிர், பயிரிடும் பருவம் ஆகிய விபரங்களை ஒரு தாளில் எழுதி, "மண் பரிசோதனை நிலையம், ராயனூர், கரூர்' என்ற முகவரிக்கு அனுப்பி பரிசோதனை முடிவுகளை பெற்றுக்கொள்ளலாம்.'

மண் மாதிரி எடுக்கும் முறை மற்றும் விபரத்தை அருகிலுள்ள வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை அலுவலர்களை அணுகி தெரிந்து கொள்ளலாம், ஒரு மண் மாதிரிக்கு ஆய்வுக் கட்டணமாக 10 ரூபாய் மட்டும் வசூலிக்கப்படுகிறது. கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், தற்போது பயிர் இல்லாத நேரத்தில் மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்யலாம்.

**வெற்றிலை ஆராய்ச்சி மையம்அமைக்க விவசாயிகள்எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2011,21:49 IST

பெரியகுளம்:பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரியில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும் என வெற்றிலை விவசாயிகள், தோட்டக்கலைக்கல்லூரி நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். பெரியகுளம், ஒன்றியப்பகுதிகளான வடுகபட்டி, தாமரைக்குளம், மேல்மங்கலம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி உட்பட பல பகுதிகளில் நூற்றுக்கணக்கான எக்டர் பரப்பளவில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது.இங்கு விளையும் வெற்றிலைகள் மாநிலத்தில் பல பகுதிகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

வெற்றிலை ரகங்களான வெள்ளை, பச்சை, கற்பூரம், அந்தியூர், கணியூர், சிறுகமணி-1, சிறுகமணி-2 உட்பட வெற்றிலையில் பல ரகங்கள் <<உள்ளன. விவசாயிகள் தரமான விதைக் கொடிகளே தேர்வு செய்கின்றனர். இருந்தபோதிலும் சாதரணமாக விதைக் கொடிகள் வழியாக தீச்சல், வாடல், ஈரப்புள்ளி மற்றம் கருந்தாள் போன்ற நோய்கள் பரவுகிறது.வெற்றிலையில் பூச்சி மற்றும் நூற்புழு நோய்களால் கடந்த பருவத்தில் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் வெற்றிலை விவசாயிகளின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டன. இவற்றை தடுக்க வெற்றிலையில் பாதிப்பு குறித்து இப்பகுதி ஒரு ஆராய்ச்சி மையம் அமைப்பது அவசியம். பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், நிரந்தரமாக வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

**எகிறியது எண்ணெய்; வாட்டுது வத்தல் விலை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2011,22:37 IST

விருதுநகர்:விருதுநகர் மார்க்கெட்டில் கடலை எண்ணெய் விலை டின்னுக்கு 80 ரூபாய், சூரியகாந்தி எண்ணெய் டின்னுக்கு 50 உயர்ந்துள்ளது. நிலக்கடலை பருப்பு மூடைக்கு 100 ரூபாய் உயர்ந்துள்ளது. வத்தல் குவிண்டாலுக்கு 800 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.விருதுநகரில் சர்க்கரை விலை மூடைக்கு 2,795 ரூபாயாக உள்ளது. கடலெண்ணெய் டின்னுக்கு 1,230 லிருந்து 1,310 ஆகவும், சூரியகாந்தி எண்ணெய் 1,120லிருந்து 1,170 ஆக உயர்ந்துள்ளது. பாமாயில் 895 ரூபாயாக உள்ளது. நிலக்கடலைப் பருப்பு 3,900 லிருந்து 4,000 ரூபாயாக உயர்ந்துள்ளது. கடலைப் புண்ணாக்கு மூடை 2,700 ரூபாயாக உள்ளது. நிலக்கடலைப்பருப்பு விலை உயர்ந்ததால் கடலை எண்ணெய் விலை உயர்ந்துள்ளதாக எண்ணெய் வியாபாரிகள் தெரிவித்தனர்.பருப்பு: உளுந்து விலை மூடைக்கு 4,900 லிருந்து 5,200 ரூபாயாகவும், சுமார் ரகம் 4,100 லிருந்து 4,200

வரையும், பர்மா பருவட்டு 5,200 ரூபாயாக உள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 6,800 ஆகவும், பர்மா பருவட்டு 5,250 ரூபாயாக உள்ளது. துவரை 4,400 லிருந்து 4,800 ஆகவும், பொடி துவரை 3,800 ஆகவும், துவரம் பருப்பு 6,000லிருந்து 6,200 ரூபாயாக உள்ளது.

பொடி துவரம் பருப்பு 4,800 ஆகவும், பாசிப்பயறு 4,400 லிருந்து 4,300 ஆகவும், லயன் பருவட்டு 4,900 ஆகவும், சுமார் ரகம் 3,700 ரூபாயாகவும் உள்ளது. பாசிப்பருப்பு 6,200 ஆகவும், சுமார் ரகம் 5,600லிருந்து 5,900 ரூபாயாக உள்ளது. மைதா 2,180 ஆகவும், ரவை 2,260 ஆகவும், கொண்டைக்கடலை 2,700 ஆகவும் பொரிகடலை 2,050 லிருந்து 2,100 ரூபாயாக உயர்ந்துள்ளது.மிளகாய் வத்தல்: புது வத்தல் 8,000 லிருந்து 8700 ஆகவும், முண்டு வத்தல் 7,500 லிருந்து 8,300 ரூபாயாக உயர்ந்துள்ளது. சோடை வத்தல் 3,000 ரூபாயாகவும், பழைய சோடை வத்தல் 2,500 ரூபாயாகவும் உள்ளது.

தினகரன்

## மார்ச் மாத பணவீக்கம் 9 சதவீதமாக அதிகரிப்பு

பதிவு செய்த நாள் 4/16/2011 12:43:25 AM



புதுடெல்லி : கடந்த மார்ச் மாதத்தில் பணவீக்கம் 8.98 சதவீதமாக அதிகரித்துள்ளதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது ரிசர்வ் வங்கியின் இலக்கான 8 சதவீதத்தைவிட அதிகம். கடந்த நிதியாண்டின் (2010&11) துவக்கத்தில் பணவீக்கம் இரட்டை இலக்கத்தில் இருந்தது. இதை 2011 மார்ச்சுக்குள் 5 சதவீதமாகக் குறைக்க இலக்கு நிர்ணயித்தது. விலைவாசியைக் கட்டுப்படுத்த கடன் வட்டி விகிதங்களை ரிசர்வ் வங்கி உயர்த்தியது.

எனினும், தொடர்ந்து பணவீக்கம் எதிர்பார்த்த அளவுக்கு குறையாததால் தொடர்ந்து கடன் வட்டியை உயர்த்தியது. கடந்த 15 மாதங்களில் 8 முறை கடன் வட்டியை உயர்த்தப்பட்ட போதிலும், பணவீக்கம் குறையவில்லை. பிப்ரவரியில் 8.31 சதவீதமாக இருந்த பணவீக்கம், மார்ச் மாதத்தில் 8.98 சதவீதமாக உயர்ந்துள்ளது. எரிபொருள் மற்றும் உற்பத்தி பொருட்களின் விலை அதிக அளவில் உயர்ந்ததே இதற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

முதன்மை பொருட்கள் (12.96%), உணவுப் பொருட்கள் (9.47%), காய்கறிகள் (9.17%), உணவு அல்லாத பொருட்கள் (25.88%) எரிபொருள் மற்றும் மின்சாரம் (12.92%), சமையல் எரிவாயு (14.99%), பெட்ரோல் (23.14%), சமையல் எண்ணெய் (12.54%) ஆகியவை கடந்த ஓராண்டில் அதிக அளவில் விலை உயர்ந்த பொருட்கள்.